**விவசாயிகளின் நம்பிக்கை பொறுப்பு நிதியம் - 2016**

---

விவசாயிகளின் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றும் ஏனைய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1994 மார்ச் 09 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் நிதியத்தின் பொறுப்பாளிகளிடையே மேற்கொள்ளப்பட்ட நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, விவசாயிகளின் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாய கிணறு ஒன்று நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது குருநாகல் மாவட்டச் செயலாளர் மூலம் வழங்கியிருந்த ரூபா 100,000 இற்கான முற்பணத்தை தீர்க்கும் போது அதனை முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கங்களின் கீழ் கடந்த ஆண்டிற்கான இலாபத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 100,000 தொகையினால் குறைந்திருந்தது.

(ஆ) 2014 ஆண்டின் போது கண்டி வென்டருவ கமநலசேவை நிலையத்தின் உரக் களஞ்சியமொன்று நிர்மாணிப்பதற்காக முதல் கட்டத்தின் கீழ் வழங்கியிருந்த ரூபா 315,000 இற்கான முற்பணத்தை தீர்க்கும் போது தீர்த்தல் நாட்குறிப்பு உறுதிச்சான்று இரண்டு தடவைகள் பதிவு செய்யப்பட்டிருந்தமையால் திரண்ட நிதியம் மற்றும் முற்பணக் கணக்கின் மீதி மேற்கூறிய பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

## 2.3 பெற வேண்டிய கணக்குகள்

03 வருடங்கள் முதல் 15 வருடங்கள் வரையான காலப்பகுதியைச் சேர்ந்த 5 வகையான கடன்கள் தொடர்பாக ரூபா 140,177,028 இற்கான 16 கடன் மீதிகள் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்டதுடன், அக் கடன் மீதிகளை அறவீடு செய்தல் தொடர்பாக 2014 ஆண்டின் போது நியமனம் செய்யப்பட்டிருந்த கடன் கணிப்பீட்டு சபையினால் விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கடன் மீதிகள் 2017 ஜூலை 25 ஆம் திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 32,499,321 இற்கான மிகையொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 10,311,493 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 22,187,828 இற்கான வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. அபிவிருத்தி செலவுகள் ரூபா 23,933,954 இனால் குறைவடைதல் மேற்கூறிய வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகியிருந்துள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகள் பகுப்பாய்வு செய்யும் போது 2014 ஆண்டு தவிர ஏனைய ஆண்டுகளின் போது நிதி மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், வருமான வரி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் மேற்கொண்ட போது 2012 ஆண்டின் போது ரூபா 219,305,053 தொகையாகக் காணப்பட்ட நிறுவனத்தின் பங்களிப்பு 2013 ஆண்டின் போது 94 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் 2014 ஆண்டின் போது ரூபா 9,954,152 இற்கான மறை பெறுமானம் ஒன்று ஆகியுள்ளது. மீண்டும் 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது முறையே ரூபா 11,795,697 இற்கான மற்றும் ரூபா 34,591,280 இற்கான இடையறாத அதிகரிப்பு ஒன்றினை காட்டியது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

உள்நாட்டு விவசாய மக்களின் கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் நலன்புரி விடயங்களை அபிவிருத்தி செய்தல், சிறு விவசாயிகளுக்கு குறுகிய கால விவசாயக் கடன் வசதிகளை வழங்குதல், சிறு விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகளை வழங்குதல், பண நெருக்கடியை தவிர்ப்பதற்காக சிறு விவசாயிகளுக்கு சந்தைக் கடன் வசதிகளை வழங்குதல், சிறு விவசாயிகளின் கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் நலன்புரி விடயங்கள் தொடர்பாக விளிப்புணர்வுகள் ஏற்படுத்துதல், காட்சிகள் மற்றும் மாதிரிகளை நடத்துதல் மற்றும் ஏனைய பல்வேறு காரணங்களுக்காக முன்னோடி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் நடத்துதல், பயிர்கள் மற்றும் கால்நடை உற்பத்தி மற்றும் உற்பத்தி செயற்பாடுகளுக்காக சிறு விவசாயிகளுக்கு உதவுதல் மற்றும் கமத்தொழில் அபிவிருத்திக்கு வசதிகளை வழங்குவதற்காக விஷேடமான கமத்தொழில் சார் வேலைகளை அமுல் நடத்துதல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக விவசாய நம்பிக்கை பொறுப்பு நிதியம் நிறுவப்பட்டது. மேற்கூறிய குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நம்பிக்கை பொறுப்பு நிதியம் நிறுவப்பட்டுள்ள முக்கிய குறிக்கோள்களிடையே சிறு விவசாயிகளுக்கு கமத்தொழில் உள்ளீடுகளை வழங்குதல் மற்றும் கால்நடை உற்பத்தி செயற்பாடுகளை போலவே உற்பத்தியை சீரிடுவதற்காக தேவையான ஏனைய சலுகைகள் வழங்குதல் ஆகிய விடயங்கள் செலவு மதிப்பீட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது இந்த நிதியத்தின் கீழ் 41 செயற்திட்டங்களை அமுல் நடாத்துவதற்காக ரூபா 142,360,517 இற்கான தொகையொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 27 செயற்திட்டங்கள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 44,616,377 இற்கான தொகையொன்று விடுவிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் செயற்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தை உள்ளடக்கிய அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் திட்டமிட்டிருந்த 14 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் பல்வேறு காரணங்களினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விவசாய அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் நிதித்தேவைகளை சரியாக இனங்காணாமையினால் முற்பணமாக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 53,262,500 தொகை மற்றும் திருத்திய மதிப்பீட்டின் மூலம் 05 குறுகிய கால கடன் அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 7,299,700 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நீண்டகாலக் கடனின் கீழ் 05 செயற்திட்டங்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 128,535,580 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 03 செயற்திட்டங்களுக்காக மாத்திரம் ரூபா 38,197,000 தொகையொன்று விடுவிக்கப்பட்டிருந்ததுடன் வடமேல் மாகாண சபையின் விவசாய வங்கியின் மூலம் கன்றுகள் நடும் இயந்திரம் வழங்குதல் மற்றும் மோட்டார் சைக்கிள் கடன் வழங்கும் செயற்திட்டத்தை அமுல் நடத்தியிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது நெல் உலர்த்தும் 6 சூட்டுக்களங்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 4,060,000 தொகை வழங்கியிருந்ததுடன், அவை தொடர்பான பௌதீகப் பரிசோதனையின் போது அவற்றில் 04 சூட்டுக்களங்கள் உரிய நியமங்களுக்கு தயாரித்திருக்காத காரணத்தினால் உற்பகுதி வெடிப்படைந்து இருந்ததுடன் நீர் வடிந்து ஓடக் கூடிய விதமாக மேற்பகுதி நிர்மாணிக்கப்பட்டிருக்காமையால் நீர்சேகரமாகிக் காணப்பட்டது. அதேபோல் தனியார் காணிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 2 சூட்டுக்களங்களும் முறைசார் விதமாக அரசுக்கு உரித்தாக்கியிருக்கவில்லை. மேலும் 6 சூட்டுக்களங்கள் நிர்மாணிப்பதற்காக தேவையான விவரக் குறிப்பு தயாரித்திருக்காமையினால் அவற்றை சதுர அளவு ஒவ்வொன்றிற்கிடையே வித்தியாசமாகக் காணப்பட்டதுடன் விலை அளவுகளும் வித்தியாசமாகக் காணப்பட்டதுடன் சூட்டுக்களங்களைச் சுற்றி பாதுகாப்பு வேலி நிர்மாணித்தல் வரைபுகளில் உட்படுத்தியிருக்காமையால் மிருகங்களால் ஏற்படும் சேதத்தினை தவிர்க்க முடியாதிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2013 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த காலி மாவட்டத்தில் வக்கல்மோதர உவர்நீர்க் கட்டுப்பாட்டு செயற்திட்டம் மற்றும் வவுனியா மற்றும் மொனறாகலை மாவட்டங்கள் சிறு நீர்ப்பாசன புனரமைப்புச் செயற்திட்டங்களுக்காக முறையே ரூபா 5,000,000 தொகை மற்றும் ரூபா 19,000,000 தொகைகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 5,300,000 தொகை மற்றும் ரூபா 12,118,640 தொகை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முறையே ரூபா 2,615,513 இற்கான மற்றும் ரூபா 1,744,000 இற்கான வேலைகளுக்காக விலைப்பட்டிகள் சமர்ப்பித்திருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2002 ஆண்டின் போது விவசாயிகளின் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு சுழல் நிதியம் மற்றும் கமத்தொழில் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றை ஒன்றிணைக்கும் போது அந்த நிதியங்களில் காணப்பட்ட ரூபா 171,792,093 தொகைக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் விவசாயிகளின் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ஒப்புக்கொண்ட போது விரிவான அட்டவணைகள், மீதிகளை உறுதிப்படுத்தல்கள் மற்றும் கடன்பட்டோர் மீதிகளின் அட்டவணையுடன் அம் மீதிகளை ஒப்புக்கொண்டிருக்கவில்லை. அதன் காரணமாக, இடையிடையே மீதி கணிப்பீட்டுச் சபைகள் நியமனம் செய்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை அம் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக முகாமைத்துவத்திற்கு இயலாதிருந்தது.

(ஆ) வருமான வரி செலுத்தும் பொறுப்பில் இருந்த நிறுவனத்தை விடுவிப்பதற்கு தேவையான கருமங்கள் பூர்த்தி செய்திருக்காமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வருமான வரி என ரூபா 29,665,397 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2017 ஜுலை 25 வரை அவ் வரியினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் எதிர்காலத்தில் மிகை விதிப்பு ஒன்றுடன் செலுத்துவதற்கு நேரிடின் அதன் மூலம் நிறுவனத்திற்கு நிதிசார் நட்டமொன்று ஏற்படும் ஆபத்து ஒன்று காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது.

(இ) 2016 பெப்ரவரி 12 திகதி 02/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 1 (ஈ)(ii) இன் பிரகாரம் மோசடியொன்று அல்லது தற்போது காணப்படும் முறைமையில் பிழை காணப்படாத போது ரூபா 2,000,000 தொகையை மிகைக்காத நட்டங்கள் தொடர்பாக செயற்படுத்துவதற்காக அமைச்சு செயலாளருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. எனினும் 2004/2005 முற்பணங்களின் மூலம் கொள்வனவு செய்திருந்த நெற்களில் ஏற்பட்டிருந்த நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 104 இன் பிரகாரம் விசாரணை மேற்கொள்ளல் 2015 ஆம் ஆண்டு வரை தாமதித்தல், களஞ்சியங்களில் அரிசி குறைதல் மற்றும் அழிவுகள் ஏற்படுதல், விவசாய கம்பனிகள் செயலிழக்கும் வரை வழங்கியிருந்த பணத்தை திருப்பி பெறாமை போன்ற காணப்பட்ட தவறுகளின் காரணமாக ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 1,461,220 தொகை அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மாவட்ட கமநலசேவை நிலையங்களுக்கு அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்வதற்காக வழங்கும் முற்பணங்கள் தொடர்பாக தீர்த்தல் உறுதிச் சான்றுகள் குறிப்பிட்ட வருடம் முடிவடைய முன்னர் பெற்றுக்கொள்வதற்காக முகாமையின் மீது கவனம் செலுத்தப்படாமையால் நிறுவனத்தின் நிதி விளைவுகளில் உண்மையான நிலைமையொன்றினை சித்தரித்துக்காட்டவில்லை என அவதானிக்கப்பட்டது.

(உ) சிறு விவசாயிகளுக்கு கமத்தொழில் கடன் வழங்குவது நிறுவனத்தின் குறிக்கோளாக காணப்பட்ட போதிலும் பாரிய அளவிலான வர்த்தக முயற்சிகள் மேற்கொள்பவர் என இனங்காணக் கூடிய நபர் ஒருவருக்கு 05 ஏக்கர்களில் காபனிக் ரெட்லேடி பப்பாசி பயிர்செய்கைக்காக ஒரு வருடம் விடுதலைக் காலத்தை தொடர்ந்து வரும் இரண்டு வருடங்களில் செலுத்தும் முடிக்கும் அடிப்படையில் குருநாகல் விவசாய வங்கியின் ஊடாக 2015 நவம்பர் 16 மற்றும் 2016 மார்ச் 04 ஆகிய திகதிகளில் கூட்டுத்தொகை ரூபா 1,000,000 இற்கான தொகையொன்று விடுவிக்கப்பட்டிருந்தது. அதே போல் பிணையாளர்களிடம் முறையான பிணை முறிகள் பெற்றுக்கொள்ளாமல் மற்றும் ஆரம்ப தவணைப்பணம் கிடைத்திருக்காத போது அதன் மீது கவனம் செலுத்தாமல் இரண்டாவது கடன் தவணைப் பணத்தையும் 2016 மார்ச் 04 திகதி விடுவிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2017 மே 31 திகதி வரை கடனைத் திருப்பிச் செலுத்தப்பட தேவையில்லாத சலுகைக் காலம் முடிவடைந்திருந்த போதிலும் நிறுவனத்திற்கு ஆரம்ப தவணைப் பணமும் கிடைத்திருக்காததுடன் கடனை அறவீடு செய்யும் செயற்திட்டமொன்றினை செயற்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) 04 அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், கேகாலை மாவட்டச் செயலாளர் மற்றும் வடமாகாண சபை ஆகியவற்றிற்கு 2014 ஆம் ஆண்டின் போது வழங்கியிருந்த முற்பணங்களை தீர்க்கப்படாமல் மீண்டும் மீண்டும் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 3,999,419 இற்கான தீர்க்கப்படாத முற்பண மீதி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 6,790,587 தொகை ஆகியிருந்தது. வழங்கப்படுகின்ற முற்பணங்களை உரிய காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் பழைய முற்பண மீதிகளை நட்டம் ஆக கணித்து பதிவழிக்க நேரிட்ட பழைய அனுபவங்களும் காணப்பட்ட போதிலும் தற்போதும் அவ்வாறு செயற்பட்டுள்ளது.

## 4.3 செயற்பாட்டுத் தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனுராதபுர மாவட்டத்தில் சோளம் பயிர்செய்யும் விவசாயிகளுக்காக கடன் வழங்கு (2015/16 பெரும்போகம்) வதற்காக 2015 ஆண்டின் போது கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ரூபா 90,000,000 தொகையொன்று நிதியத்தில் இருந்து வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் விவசாய வங்கிகள் ஊடாக 5386 விவசாயிகளுக்கு ரூபா 15,000 வீதம் குறுகிய காலக் கடனாக ரூபா 80,790,000 இற்கான தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. கடன் தொகை ஒரு வருடத்தில் தீர்க்க வேண்டும் என அறிவித்திருந்த போதிலும், 2017 மே 31 திகதி வரை விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு மேலும் அறவிடப்பட வேண்டிய தொகை என ரூபா 54,012,653 தொகை காணப்பட்டது. கோவையின் பிரகாரம் விவசாயிகளுக்கு வினியோகிக்காமல் காணப்பட்ட ரூபா 9,210,000 தொகையில் மேலும் ரூபா 900,000 தொகையொன்று கிடைக்க வேண்டியிருந்த போதிலும் அது 2017 ஜூலை 25 திகதி வரை கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 44 விவசாய கிணறுகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 4,000,000 இற்கான நிதி ஒதுக்கீடு வவுனியா மாவட்ட செயலகத்திற்கு வழங்கியிருந்ததுடன் 2017 மார்ச் மாதத்தில் 15 கிணறுகளின் தெரிவுப் பரிசோதனையின் போது அளவைப் பத்திரங்களில் காணப்படும் நியமங்கள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும் 5 விவசாய கிணறுகளுக்காக ரூபா 125,809 இற்கான மிகைக் கொடுப்பனவு ஒன்று செய்யப்பட்டிருந்தது.

## 4.4 பதவியணியினர் நிருவாகம்

நிதியத்தின் விடயங்களை நடாத்துவதற்காக விவசாய அமைச்சைச் சேர்ந்த ஆறு உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன் அவர்களில் இரண்டு அலுவலர்கள் கணக்குகள் மற்றும் நிருவாக விவகார முகாமைத்துவதற்திற்காக நியமனம் பெற்றிருந்தனர். அவ் இருவருக்கும் பதில் கடமைச் சம்பளமாக ரூபா 119,445 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. எனினும் கணக்குகள் மற்றும் நிருவாக விடயங்களுக்காக நிரந்தர அலுவலர்கள் நியமனம் செய்து அவர்களுக்கு பொறுப்புச் சாட்டப்பட்டிருக்காமையால் கடன் அறவீடு செய்யப்பட்டிருந்த முன்னேற்றம் கீழ் மட்டத்தில் காணப்பட்டமை, தீர்க்கப்படாத முற்பணங்கள் காணப்பட்ட போது மீண்டும் மீண்டும் முற்பணங்கள் வழங்குதல், கடன் அறவீடு செய்வதில் கால தாமதம், அறவிடப்படாத கடன்களை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், கடன் ஏடுகள் உரிய விதத்தில் இற்றைவரைப்படுத்தப்படாமை மற்றும் கோவைகள் பேணப்படுவதில் திருப்திகரமான நிலையில் காணப்படாமை போன்ற பலவீனங்கள் ஏற்பட்டிருந்தன.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க பொதுநிதி சுற்றறிக்கையின் 03(ஆ) ஆம் பந்தியின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிடையே 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை முரண்கள் காணப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அமைச்சுச் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பெற வேண்டிய கடன்மீதிகள் | கடன் மீதிகளை அறவீடு செய்வதில் தாமதம் மற்றும் இனங்காணப்படாத கடன்மீதிகள் தொடர்பாக செயற்படுவதில் தாமதம் காணப்படல். |
| (ஆ) | கடன் முகாமைத்துவம் | நிறுவனத்தின் குறிக்கோள்களுக்கு முரணாக கடன் வழங்குதல், உடன்படிக்கைகள் பூர்த்தியாக காணப்படாமை, கடன் வழங்கும் நடைமுறை மற்றும் வட்டி வீதம் தொடர்பாக பொதுவான கொள்கை ஒன்று காணப்படாமை, கடன் பணத்தின் உச்ச எல்லை மற்றும் பிணைகள் வைத்தல் தொடர்பாக பலவீனங்கள் காணப்படல். |
| (இ) | ஒப்பந்த நிருவாகம் | திட்டமிட்ட காலப்பகுதியில் செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமை, செயற்திட்டங்கள் தொடர் செயல் நடவடிக்கை நடைபெறாமை, பிழையற்ற மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமை, பூர்த்தி அற்ற உடன்படிக்கைகள் மீது முற்பணங்கள் வழங்குதல், முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்படாமை. |
| (ஈ) | முற்பணங்கள் வழங்குதல் | அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக பல்வேறு செயற்படு நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த முற்பணம் வருட இறுதித் திகதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |